<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,</u>
<u>ஸ்ரீவில்லிபுத்தூர்</u>

**OS.No:139/2010** **நாள் 09.03.2026.**

**வாசா.1, திரு.தன்ராஜ்**

**வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் 3, 4, 6, 11, 12 எதிர்வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார் –**

வாசாஆ.1 கிரைய ஒப்பந்த ஆவணத்தில் 65 ஏக்கர் நிலம் கிரையம் செய்துகொள்ளவது சம்மந்தமாக எழுதப்பட்டது என்றால் சரிதான்.அதில் ஏக்கர் ஒன்று ரூ.83 ஆயிரம் என்று எழுதப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். 6 மாத காலத்திற்குள் கிரையம் முடிக்க வேண்டும் என்றும் அதில் சொல்லியுள்ளது என்றால் சரிதான். புஞ்சை நிலத்தில் உள்ள கருவேல மரங்களை நான் என்னுடைய சொந்த செலவில் வெட்டி அப்புறப்படுத்தி அதனை விற்பனை செய்து கொள்ளவேண்டியது என்று வாசாஆ.1 ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் அப்படியில்லை. நான் பிராது சொத்தில் இருந்த கருவேல முள்மரங்களை புல்டோசர் மூலமாகவே , ஜேசிபி மூலமாகவோ வேலையாட்கள் மூலமாகவோ வெட்டி அப்புறப்படுத்துவது சம்மந்தமாக எனக்கு ஏற்பட்ட செலவினங்களை ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையிலும், நிரூபண வாக்குமூலத்திலும், கூடுதல் வழக்குரையிலும் ரூ.6,31,000/-க்கு நான் செலவு செய்ததாக சொல்லியுள்ளேன் அதற்கான ஆவணத்தையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதா்ன நான் தொகை ரூ.6,31,000/-யை செலவு செய்தேன் என்று வாசாஆ.1 ஆவணத்தில் சொல்லப்படவில்லை என்றும் அந்த வகையில் 1 முதல் 4 எதிர்வாதிகளிடமிருந்து ஒப்புதல் எதுவும் பெறப்பட்டுள்ளதாக வாசாஆ.1 ஆவணத்தில் எதுவும் எழுதப்படவில்லை என்றால் சரிதான். தொகை ரூ.6,31,000/-யை நான் செலவு செய்திருந்தால் 1 முதல் 4 எதிர்வாதிகளிடமிருந்து ஒப்புதல் பெற்று வாசாஆ.1 ஆவணத்தில் எழுதி வாங்கியிருப்பேன் என்றும் அவ்வாறு தொகை எதையும் நான் செலவலிக்கவில்லை என்பதால் தான் நான் வாசாஆ.1 ஆவணத்தில் ஒப்புதல் எதுவும் பெறவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. வாசாஆ.1 ஆவணப்படிக்கு 6 மாத காலத்திற்குள் நான் நிலத்தை அளந்து கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் எதிர்வாதிகள் தங்களுக்கு 3 மாத காலம் அவகாசம் வேண்டும் என்று மனு கொடுத்ததால் நான் அளப்பதற்கு முயற்சி மேற்கொள்ளவில்லை. அந்த 3 மாத காலம் முடிவடைந்த பின்பும் நான் அளப்பதற்கு முயற்சி மேற்கொண்டேனா என்று கேட்டால் 1 முதல் 4 எதிர்வாதிகள் மயிலாடுதுறையில் இருந்து வரவில்லை அவர்கள் மனு எதுவும் கொடுக்காததாலும் நாங்கள் முட்களை வெட்டி தயாராக இருந்தும் எதிர்வாதிகள் வரவில்லை என்பதால் தான் நான் இவ்வழக்கை அதன் பின்பு தாக்கல் செய்தேன். புத்தூர் கிராமத்தில் எவ்வளவு நிலம் என்றும், சிவகிரி கிராமத்தில் எவ்வளவு நிலம் என்றும் எனக்கு தெரியாது என்றால் புத்தூர் கிராமத்தில் 21 ஏக்கரும், சிவகிரி கிராமத்தில் 15 1/2 ஏக்கர் நிலமும் பொறுத்து 1 முதல் 4 எதிர்வாதிகள் அந்த ஆவணங்களின் ஜெராக்சை என்னிடம் கொடுத்தார்கள் அதனால் எனக்கு தெரியும். மேற்சொன்ன சிவகிரி கிராமம் மற்றும் புத்தூர் கிராமத்தில் உள்ள 36 1/2 ஏக்கருக்கு என்று தனியாக ஒப்பந்தம் எதுவும் போடவில்லை வாசாஆ.1 ஒப்பந்த ஆவணம் ஏற்கனவே போடப்பட்டிருந்தது. எதிர்வாதிகளுக்கு 65 ஏக்கர் பாத்தியம் என்றும் நான்

தற்போது நீதிமன்றத்தில் 36 1/2 ஏக்கருக்கு மட்டுமே நீதிமன்ற முத்திரை கட்டணம் செலுத்தியதால் பொய்யாக 36 1/2 ஏக்கர் என்று நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது சரியல்ல. வாசாஆ.1 ஆவணத்தில் கண்ட 65 ஏக்கருக்கு நான் நீதிமன்ற முத்திரை கட்டணத்தை செலுத்தவில்லை என்றால் சரிதான். என்னிடம் கொடுத்திருந்த ஆவணத்தின் படி 36 1/2 ஏக்கருக்கு தான் நான் நீதிமன்ற முத்திரை கட்டணம் செலுத்தியிருந்தேன். அந்த 9 மாத காலத்திற்குள் 1 முதல் 4 எதிர்வாதிகள் கிரைய ஆவணத்தை முடித்துகொடுக்கவில்லை என்பதால் நான் உடனே 12.09.2010ம் தேதியில் இவ்வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். வாசாஆ.1 ஆவணத்தில் கடைசி பக்கத்தில் சாட்சிகள் 1, 2 என்று தான் சொல்லப்பட்டிருந்து சாட்சிகள் மருதுபாண்டி என்பவரிடமிருந்து பெயரை பின்னீட்டு நான் தயார் செய்துள்ளேன் என்று சொன்னால் அது சரியல்ல. வாசாஆ.1 ஆவணத்தில் கண்ட நிபந்தனை படி இந்த தேதிக்குள் நான் கிரைய பத்திரத்தை முடித்துகொள்வதாகவும் அதற்கு நான் விருப்பமாகவும் , தயாராகவும், உள்ளதாகவும் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்து கிரைய பத்திரத்தை பதிந்து முடித்துகொடுக்க வேண்டும் என்று சொல்லி வழக்கை தாக்கல் செய்து கொள்வதற்கு முன்பாக நான் 1 முதல் 4 எதிர்வாதிகளுக்கு நான் வழக்கறிஞர் மூலமாக அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் சரிதான். நான் நேரடியாக வாய்மொழியாக போய் கேட்டேன். வாசாஆ.1 சொத்து விபரத்தில் புத்தூர் கிராமத்தில் எவ்வளவு நிலம் என்றும் சிவகிரி கிராமத்தில் எவ்வளவு நிலம் என்றும் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வாசாஆ.2 ஆவணத்தை எனக்கு வழக்கின் 2ம் பிரதிவாதி ஜெயக்குமார் என்பவர் எழுதிக்கொடுத்திருந்தார். அதன் 2ம் பக்கத்தில் தபசில் கண்ட சொத்தை பொறுத்து 1 முதல் 4 பிரதிவாதிகள் தபசில் சொதது விபரத்தை பொறுத்து என்று காட்டப்பட்டுள்ளது என்றும் அதில் சொத்து விபரமாக சொல்லப்படவில்லை என்று சொன்னால் அது சரிதான். சாட்சி மீண்டும் தானாக வாசாஆ.1 ஆவணத்தில் கண்ட சொத்தை பொறுத்து தான் வாசாஆ.2 ஆவணத்தில் சொல்லப்படவில்லை என்று சாட்சியம் அளிக்கிறார். வாசாஆ.2 ஆவணத்தை வழக்கிற்காக வேண்டி என்னால் உற்பத்தி செய்யப்பட்டது என்றும் அதனை வழக்கின் 2ம் எதிர்வாதி ஜான் ஜெயகுமார் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் அதுசரியல்ல. வாசாஆ.2 முத்திரை தாளை செட்டியார்பட்டி கிராமத்தில் இருந்து வாங்கினார்கள். வாசாஆ.2 ஆவணத்தில் மருதப்பாண்டி என்பவர் ஒரு சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார் மற்றொரு சாட்சி இறந்துபோய்விட்டதாக நினைக்கிறேன். வாசாஆ.2 ஆவணத்தை யார் எழுதியது என்று கேட்டால் அவர்கள் தான் அடித்து வாங்கி வந்தார்கள். யார் எழுதியது என்று எனக்கு தெரியாது. வாசாஆ.2 ஆவணத்தில் கண்ட தொகையை வாசாஆ.1 ஆவணத்திற்கு பின்பு எப்போது பணம் கொடுக்கப்பட்டது என்றுகேட்டால் அவ்வப்பொழுது அவசரம் என்று சொல்லி பணம் வாங்கி செல்வார்கள் தேதி, மாதம், ஆண்டு என்று என்னால் சொல்ல இயலவில்லை. 1ம் எதிர்வாதி ஜான் செல்வராஜ் என்பவர் எனக்கு 14.06.2010ம் தேதியில் அவருடைய வழக்கறிஞர் மூலமாக வாசாஆ.3 அறிவிப்பு ஒன்றை அனுப்பியிருந்தார் என்று சொன்னால் சரிதான். அந்த அறிவிப்பில் அவர் ரூ.1 லட்சம் மட்டுமே பெற்றுக்கொண்டதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். வாசாஆ.1 ஆவணத்தின் பின்பக்கம் 08.01.2010ம்தேதியில் ரூ.2 லட்சமும், 12.01.2010ம் தேதியில் ரூ.2 லட்சமும் பெற்றதாக வாசாஆ.3 வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லப்படவில்லை என்று சொன்னால் அது சரிதான். வாசாஆ.1 ஆவணத்திற்கு பின்னீட்டு உள்ள ரூ.4 லட்சம் தொகையானதை நான் வழக்கிற்காக

வேண்டி பின்னீட்டு எழுதிக்கொண்டேன் என்றால் அது சரியல்ல. வாசாஆ.3 அறிவிப்பை நான் பெற்றுக்கொண்ட பிறகு ரூ.5,61,000/–ம் பெற்றுக்கொண்டதாக நான் பதில் அறிவிப்பு எதுவும் அனுப்பிக்கொள்ளவில்லை என்று சொன்னால் அது சரியல்ல ஜான் செல்வராஜுக்கு அனுப்பியுள்ளேன். ரூ.1 லட்சமே பெற்றதாக மோசடியாக 1ம் எதிர்வாதியானவர் சொல்கிறார் என்று சொல்லி நான் அவருக்கு எதிராக காவல் நிலையத்தில் புகரோ அல்லது குற்றவியல் நடவடிக்கை எதுவும் எடுத்துகொள்ளவில்லை என்றால் சரிதான். நான் உண்மையில் ரூ.5,61,000/–யை அனுப்பியிருந்து அதற்கு அவர்கள் ரூ.1 லட்சம் தான் நான் அவர்களுக்கு அனுப்பியதாக அவர்கள் சொல்லியிருந்தால் அவர்கள் மீது நான் குற்றவியல் நடவடிக்கையை எடுத்திருப்பேன் என்றும் அவர்கள் ரூ.1 லட்சம் வாங்கியதாக தான் நான் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. வாசாஆ.3 ஆன 1ம் எதிர்வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்புக்கு நான் அனுப்பியதாக சொல்லும் பதில் அறிவிப்பு வாசாஆ.4 ஆனது இல்லை என்று சொன்னால் அந்த மாதிரி தொகை ரூ.1 லட்சம் பற்றி சொல்லப்படவில்லை. வாசாஆ.4 அறிவிப்பானதை 1 முதல் 5 எதிர்வாதிகளுக்கு அனுப்பப்பட்டது என்று சொன்னால் சரிதான். வாசாஆ.4 அறிவிப்பில் நான் கிரைய ஒப்பந்த ஆவணப்படிக்கு கிரையம் முடித்துக்கொள்ள தயாராகவும் இருப்பதாகவும் சிவகிரி பத்திர அலுவலகத்திற்கு இந்த தேதியில் வரவேண்டும் என்றும், சேத்தூர் பத்திர அலுவலகத்திற்கு இந்த தேதியில் வரவேண்டும் என்று சொல்லி நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் அது சரிதான். வாசாஆ.4 அறிவிப்பில் சிவகிரியில் இவ்வளவு நிலம் தான் உள்ளது என்றும் சேத்தூரில் இவ்வளவு நிலம் தான் உள்ளது என்றும் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் அது சரிதான். வாசாஆ.4 அறிவிப்பை அனுப்பிய பின்பு தான் நான் இந்த எதிர்வாதிகளுக்கு எதிராக நீதிமன்றத்தில் 13.09.2010ம் தேதியில் நான் இந்த வழக்கை தாக்கல் செய்திருந்தேன் என்றால் அது சரிதான். ஜோசப் நாடாருக்கு மொத்தம் 36 1/2 ஏக்கர் நிலம் தான் உள்ளது என்றும் அந்த 36 1/2 ஏக்கர் நிலத்துக்கு தான் நான் ஒப்பந்தம் போட்டதாக 1 முதல் 5 எதிர்வாதிகளுக்கு எதிராக நான் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்று சொன்னால் அது சரிதான். 01.09.2010ம் தேதியில் நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் சேத்தூர் சார்பதிவக அலுவலகத்திற்கோ, அல்லது சிவகிரி சார்பதிவ அலுவலகத்திற்கோ வரவேண்டும் என்று சொல்லவில்லை என்று சொன்னால் அது சரிதான்.நான் இவ்வழக்கை தாக்கல் செய்து கொள்வதற்கு முன்பாக 1ம் எதிர்வாதி ஜான் செல்வராஜ் என்பவர் எனக்கு 08.09.2010ம் தேதியில் ஒரு கடிதத்தை அனுப்பியிருந்தார் என்றால் அது சரிதான். அந்த தபால் தான் என்னிடத்தில் காண்பிக்கப்படும் வாசாஆ.6 என்றால் சரிதான். வாசாஆ.6 அறிவிப்பு வந்த பின்பு தான் நான் 13.09.2010ம் தேதியில் 1 முதல் 5 எதிர்வாதிகளுக்கு எதிராக இந்த வழக்கை ஆரம்பத்தில் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். வாசாஆ.6 அறிவிப்பில் 1ம் எதிர்வாதியான ஜான் செல்வராஜ் என்பவர், புத்தூர் கிராமத்தில் உள்ள நிலத்திற்கு ரூ.1,10,000/–ம் சிவகிரி கிராமத்தில் உள்ள நிலத்திற்கு ரூ.1,60,000/–ம் பேசியிருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் அறிவிப்பில் அவ்வாறு சொல்லியுள்ளார் நான் அதை மறுத்துள்ளேன். ரூ.83 ஆயிரம் என்று தான் பேசப்பட்டதாக சொல்லி நான் 1ம் எதிர்வாதிக்கு மறுப்பு அறிவிப்பு எதையும் அனுப்பவில்லை என்று சொன்னால் அது சரிதான். வாசாஆ.6 அறிவிப்பில் 07.01.2010 முதல் 10.01.2010 முடிய இரண்டு பேரும் சேர்ந்து முட்களை அகற்றியதால் அதில்

வண்டி வாடகை செலவு போக லாபம் கிடைத்ததாக சொல்லியுள்ளார் என்றால் அந்த அறிவிப்பில் அவ்வாறு தான் சொல்லியுள்ளார் ஆனால் அது தவறான அறிவிப்பு . வாசாஆ.6 அறிவிப்பில் நிலமானது பருத்தி, எள் பயிரிடப்பட்டிருப்பதாகவும் சீர்த்திருத்தம் சமன் செய்யும் வேலைக்கு பேச்சு எதுவும் இல்லை என்று சொல்லியுள்ளார் என்று சொன்னால் அது தவறு. வாசாஆ.6 அறிவிப்பில் 2ம் பக்கத்தில் 5ம் எதிர்வாதியான சங்கரேஸ்வரி அந்த கிரைய ஒப்பந்த ஆவணத்தை ஒப்புக்கொள்ளவில்லை என்றும் அதனால் அவருடைய பாகத்திற்கு என்ன கிடைக்கிறதோ அதை பொறுத்து எனக்கு கிரையம் செய்து கொடுப்பதாக அந்த அறிவிப்பில் சொல்லியுள்ளார் என்று சொன்னால் அது தவறு. 18.06.2010ம் தேதி தீயீட்டி ராமசாமி நாடார் , 18.08.2010ம்தேதி தேவதாஸ் மிக்கேல் ஜெபக்களி என்பவர்கள் அறிவிப்பு அனுப்பியதற்கும் நான் தான் காரணம் என்று சொல்லி வாசாஆ.6 ஆவணத்தில் சொல்லியுள்ளது என்று சொன்னால் அவர் யார் என்று எனக்கு தெரியாது அது தவறு. வழக்கில் உள்ள 4ம் எதிர்வாதியான ஜான்வேதமுத்த என்பவர் எனக்கு 08.09.2010ம் தேதியில் வாசாஆ.7 அறிவிப்பு ஒன்றை அனுப்பியிருந்தார் என்று சொன்னால் அது சரிதான்.ஆனால் அதில் கண்ட வாசகங்கள் அனைத்தும் தவறு என்று சாட்சி சாட்சியம் அளிக்கிறார். அந்த அறிவிப்பில் 16.12.2009ம் தேதியிட்ட ஒப்பந்தமானது காலாவதியாகிவிட்டது என்று அதில் அவர் சொல்லியுள்ளார் என்றால் அப்படி தான் அவர் சொல்லியுள்ளார் அது தவறு. ஜான் செல்வராஜ் அனுப்பிய வாசாஆ.6க்கும் ஜான் வேதமுத்து அனுப்பிய வாசாஆ.7க்கும் நான் மறுப்பு தெரிவித்து நான் இன்று வரையிலும் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் அது சரிதான். நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள வாசாஆ.8 முதல் வாசாஆ.19 வரையிலானவைகள் ஜோசப் நாடார் என்ற யோசோப் நாடார் அவர் பெயரில் உள்ள புத்தூர் மற்றும் சிவகிரி கிராமத்தில் உள்ள நிலங்களுக்கான ஆவணங்கள் என்று சொன்னால் அது சரிதான். என்னிடம் காட்டப்படும் வாசாஆ.20 ஆவணமானது 2ம் எதிர்வாதியான ஜான் ஜெயக்குமாரும் 3ம் எதிர்வாதியான ஜான் ராஜ்குமாரும் அனுப்பியது. எந்த தேதியில் எழுதப்பட்டது என்று அதில் குறிப்பிடபடவில்லை என்றால் அது 03.11.2010 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வாசாஆ.20 ல் 1வது பக்கத்தில் தேதி, மாதம், ஆண்டு எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால்சரிதான். 2 பேரும் ஒரே நாளில் வந்து தான் பணம் வாங்கினார்கள். அதில் காட்டுராஜா என்பவரும், சின்னப்ப நாடார் என்பவரும் அதில் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள். அதில் சின்னப்ப நாடார் என்பவர் இறந்துபோய்விட்டார். வாசாஆ.20 ஆவணத்தை யார் தட்டச்சு செய்தார் என்று சொல்லப்படவில்லை என்று சொன்னால் அவர் தான் தட்டச்சு செய்து கொண்டுவந்தார்கள் ஆனால் பெயர் குறிப்பிடவில்லை. வாசாஆ.20 ஆவணத்தில் கண்ட படி தொகை ரூ.1,40,000/–யை வாங்கியுள்ளார்கள். இரண்டுபேரும் ஒரே நாளில் வந்து தான் தொகை ரூ.1,40,000/–யை வாங்கினார்கள். அவர்கள் வாங்கிய தேதி தான் 03.11.2010 என்று சொல்கிறேன் என்றால் ஆமாம். ஜான் ஜெயகுமாரின் கையெழுத்தை பின்பக்கத்தில் உள்ளதை நானே போட்டுக்கொண்டது என்று சொன்னால் அது சரியல்ல. அதில் உள்ள கையொப்பங்கள் அனைத்தும் ஊதா மையினால் போடப்பட்டதாக உள்ளது என்றும் 2ம் பக்கத்தில் உள்ள கையொப்பம் மட்டுமே கருப்பு மையினால் போடப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். வாசாஆ.20 ஆவணத்தில் பக்கம் 2 முதல் 8 வரை உள்ள பக்கங்களில் ஜான் ஜெயக்குமார் மற்றும் ஜான் ராஜ்குமார் ஆகியோர்களின் கையொப்பங்கள் இல்லை என்று சொன்னால் அது சரிதான். வாசாஆ.20 ஆவணமானது பின்னீட்டு என்னால் உற்பத்தி செய்யப்பட்டது என்றும்

வாசாஆ.20 ஆவணமானதை இரண்டுபேரும் சேர்ந்து ஒரே நாளில் 1ம் தாளுக்கு பின்பக்கம் இரண்டு பேரும் கையொப்பங்களை செய்திருப்பார்கள் என்றும் அவ்வாறு கையொப்பங்கள் இல்லை என்பதால் வாசாஆ.20 ஆவணமானது என்னால் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் அது சரியல்ல.

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டி இருதரப்பில் வேண்டுதல் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது)**

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 09th day of March 2026.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.